

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு 28.08.2024 அன்று புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன், மாநில தடகளச் சங்கத் துணைத்தலைவர் மரு.எ.வ.வே.கம்பன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் திருக்கோவிலூர் தொகுதி, வளையாம்பட்டு ஊராட்சியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியையும், நாடக மேடையையும் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி பொதுமக்களின் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சியர் டாக்டர் சி.பழனி, விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் டி.என்.முருகன், தயா.இளந்திரையன், ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## அமெரிக்க முதலீட்டாளர்களுக்கு

# “தடம் - தமிழ்நாட்டின் பொக்கிஷங்கள்” நினைவுப் பரிசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி பெருமிதம்!

சான்பிரான்சிஸ்கோ, செப்.1-

அமெரிக்காவில் முதலீட்டாளர்களுக்கு பரிசளித்தது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலை தளப்பதிவு வருமாறு:

**நமது உள்ளூர்க் கைவினைக் கலைஞர்களுக்கு ஊக்கமளிப்பதற்காக ‘ஸ்டார்ட்-அப் தமிழ்நாடு’-இன் ‘தடம்’ எனும் முக்கிய முன்னெடுப்பை அறிமுகம் செய்தபோது, அமெரிக்காவில் நான் சந்தித்த முதலீட்டாளர்களுக்குத் “தடம் - தமிழ்நாட்டின் பொக்கிஷங்கள்” எனும் பெட்டியினை நினைவுப் பரிசாக வழங்கியதில் பெருமையடைகிறேன்.**

**மரபை நவீனத்துடன் இணைப்பதன் வழியாக, நமது திறன்மிகு கைவினைக் கலைஞர்களுக்கு உலகளாவிய இயங்குதளத்தையும் வாய்ப்புகளையும் வழங்கி, நமது பண்பாட்டு மரபு பாதுகாக்கப்படுவதையும் வளர்ச்சிபெறுவதையும் ‘தடம்’ உறுதிசெய்யும்.**

**நமது பண்பாட்டுப் பெருமையைக் கொண்டாவோம்; முன்னேறுவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின அவர்கள் தெரிவித்துள்ளார்.



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி ஈரோடு வடக்கு, தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் நடைபெற்ற பேச்சு போட்டி தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் தலைமையில், வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் திருவேங்கடம் முன்னிலையில் மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி துவக்கி வைத்தார். பேச்சுப் போட்டியில் சட்டமன்ற உறுப்பினர் பரந்தாமன், பொன்.முத்துராமலிங்கம், கவிஞர் சல்மா, அமுதரசன், தூத்துக்குடி சரத்பாலா, சுகுணா திவாகர் ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர். நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு, கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் உள்ளனர்.

# சேலம் கிழக்கு மாவட்டத்தில் - நகர, ஒன்றிய, பேரூர் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிவிப்பு

சேலம், செப்.1-

கழக தலைவர்-தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி சேலம் கிழக்கு மாவட்டம் வீரபாண்டி, கெங்கவல்லி, ஆத்தூர், ஏற்காடு சட்டமன்ற தொகுதிகளில் நகர, ஒன்றிய, பேரூர் வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள், மாவட்ட கழக பிரதிநிதிகள், கிளைக்கழக செயலாளர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், தேர் தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தின் துணை அமைப்புகளான அணிகளின் மாநில துணை அமைப்பாளர்கள், மாவட்ட தலைவர்கள், துணைதலைவர்கள், அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.



1.9.2024-காலை 10 மணி-ஆத்தூர் ஒன்றியம்,கீரிப்பட்டி பேரூர்-ஆத்தூர் துளுவ வேளாளர் மண்டபம்-கு.தங்கராசு-மாவட்ட கழக செயலாளர்- வே.செழியன், பிற்பகல் 1 மணி -நரசிங்கபுரம் நகரம்-ஆத்தூர் துளுவ வேளாளர் மண்டபம்-எஸ். இராமசாமி- மாவட்ட கழக செயலாளர் என்.பி.வேல்முருகன், ஆத்தூர் நகரம்-ஆத்தூர் துளுவ வேளாளர் மண்டபம்- அ.மாணிக்கம்-மாவட்ட கழக செயலாளர் கே.பாலசுப்பிரமணியம், மாலை 3 மணி- பெத்தநாயக்கன்பாளையம் மத்திய ஒன்றியம்- ஏத்தாப்பூர் பேரூர்-கண்ணையன் ஆசாரி திருமண மண்டபம்- கி.மாயகண்ணன்- மாவட்ட கழக செயலாளர் வெ.சத்தியமூர்த்தி, பெத்தநாயக்கன் பாளையம் தெற்கு ஒன்றியம்-பெத்தநாயக்கன்பாளையம்பேரூர்- கண்ணையன் ஆசாரி திருமண மண்டபம்-அ.சுப்ரமணியம்- மாவட்ட கழக செயலாளர் த.மருதமுத்து,

2.9.2024-காலை 10 மணி- தலைவாசல் மத்திய ஒன்றியம்-அரிமா திருமண மண்டபம்- தலைவாசல் - ரா.பிச்சமுத்து- மாவட்ட கழக செயலாளர் க.பழனிசாமி, மாலை 3 மணி-தலைவாசல் வடக்கு ஒன்றியம்- LR திருமண மஹால் தேவியாக்குறிச்சி-ப.உதயசூரியன் மாவட்ட கழக செயலாளர் பெ.பால முருகன், 3.9.2024-காலை 10 மணி - கெங்கவல்லி ஒன்றியம்-தம்மம்பட்டி பேரூர், செந்தா ரப்பட்டி பேரூர், கெங்கவல்லி பேரூர்,

தெடாவூர் பேரூர்- செட்டியார் திருமண மண்டபம்- கெங்கவல்லி- மாவட்ட கழக செயலாளர்

ஆர்.சித்தார்த்தன், மாலை 3 மணி - தலைவாசல் தெற்கு ஒன்றியம்- வீரகனூர் பேரூர் மகாலட்சுமி திருமண மண்டபம் -இலுப்பநத்தம்-ஆர்.கருணாநிதி- மாவட்ட கழக செயலாளர்

பி.ஜி.அழகுவேல், 7.9.2024- காலை 10 மணி - வாழப்பாடி வடக்கு ஒன்றியம்- வாழப்பாடி பேரூர்- வாழப்பாடி பேரூர் - தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம், வாழப்பாடி- சோலை கோவிந்தன்- மாவட்ட கழக செயலாளர் எஸ்.சி.சக்கரவர்த்தி, மாலை 3 மணி-வாழப்பாடி தெற்கு ஒன்றியம்-பழனியாபுரம் சமுதாய கூடம்-K.M. மாணிக்கம்- மாவட்ட கழக செயலாளர் செ.மாதேஸ்வரன்,8.9.2024-காலை 10 மணி - ஏற்காடு ஒன்றியம்- TGI Hotel ஏற்காடு

- வி.தங்கசாமி- மாவட்ட கழக செயலாளர் கே.வி. இராஜா, 9.9.2024 - காலை 11 மணி-பெத்தநாயக்கன் பாளையம் வடக்கு ஒன்றியம்-லட்சுமி மஹால் கருமந்துறை-ம.பழனிமுத்து - மாவட்ட கழக செயலாளர் சிவராமன்,10.9.2024-காலை 10 மணி- அயோத்தியாபட்டணம் தெற்கு ஒன்றியம், அயோத்தியாபட்டணம் பேரூர்-ஸ்ரீ குமரன் மஹால் திருமண மண்டபம்,சின்னகவுண்டாபுரம் -அ.ராயப்பன்- மாவட்ட கழக செயலாளர் அ.விஜயகுமார், மாலை 3 மணி-அயோத்தியாபட்டணம் வடக்கு ஒன்றியம்-ஸ்ரீ குமரன் மஹால் திருமண மண்டபம்,சின்னகவுண்டாபுரம் -பா.கௌதமன்-மாவட்ட கழக செயலாளர் க.ரத்தினவேல்.

## பெரம்பலூர் மாவட்டத்தில்

# ஒன்றிய,நகர, பேரூர் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிவிப்பு!

பெரம்பலூர், செப்.1-

பெரம்பலூர் மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய,நகர,பேரூர் வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறுவது குறித்து மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கை வருமாறு,

16.08.2024 அன்று சென்னையில் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பெரம்பலூர் மாவட்டத்தில் ஒன்றிய,நகர, பேரூர் பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்க்கண்டவாறு நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் கலந்து கொள்கின்றனர்.

இதில்மா நில நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி



அமைப்பு பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

01.09.2024 ஞாயிற்றுக்கிழமை, காலை 10.00 மணி. வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியம். J.P.S.திருமண மஹால். கிருஷ்ணாபுரம்.

12.00 மணி.பூலாம்பாடி பேரூர்.ரெட்டியார் திருமண மண்டபம். பூலாம்பாடி. 02.09.2024 திங்கட்கிழமை. காலை 10.00 மணி.ஆலத்தூர் கிழக்கு ஒன்றியம்.கலைஞர் திடல், கொளக்காநத்தம்.

12.00 மணி.வேப்பூர் தெற்கு ஒன்றியம்.MST திருமண மஹால்.குன்னம். மாலை 4.00 மணி. வேப்பூர் வடக்கு ஒன்றியம்.AGS திருமண மஹால் சு.ஆடுதுறை.

03.09.2024 செவ்வாய்க்கிழமை . மாலை 4.00 மணி. லெப்பைக்குடிக்காடு பேரூர். சலாமத் பள்ளி, லெப்பைக்குடிக்காடு. 05.09.2024 வியாழக்கிழமை. காலை 10.00 மணி.பெரம்பலூர் ஒன்றியம். முத்துகிருஷ்னா மக்கள் மன்றம்.பெரம்பலூர்.

06.09.2024 வெள்ளிக்கிழமை. காலை 10.00 மணி. பெரம்பலூர் நகரம்.முத்துகிருஷ்னா மக்கள் மன்றம். பெரம்பலூர்.

07.09.2024 சனிக்கிழமை .காலை 9.00 மணி. ஆலத்தூர் மேற்கு ஒன்றியம்.

ஆத்தி நாட்டார் திருமண மண்டபம். செட்டிகுளம்.11.00 மணி.வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியம்.

ADM திருமண மண்டபம். வி.களத்தூர்.

09.09.2024 திங்கட்கிழமை. காலை 10.00 மணி. அரும்பாவூர் பேரூர்.

ரெட்டியார் திருமண மண்டபம் அரும்பாவூர்.

12.00 மணி. குரும்பலூர் பேரூர்.

ரெட்டியார் திருமண மண்டபம். குரும்பலூர்.

கூட்டத்தின் பொருள்!

1)2024செப்டம்பர் 15, பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 ஆவது பிறந்த நாள் விழா.

2)2024செப்டம்பர் 16, தி.மு.க.பவள விழா.

3)2024செப்டம்பர் 17, தந்தை பெரியார் அவர்களின் 146ஆவது பிறந்த நாள் விழா.

4)கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## ஞான.இமையநாதன் வரவேற்புரை!

# மயிலாடுதுறை மத்திய ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., சிறப்புரை!

மயிலாடுதுறை, செப்.1-

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை மத்திய ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் திருவிழந்தூர் பல்லவராயன் பேட்டை பத்மவாசன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றிய அவைத் தலைவர் வி.பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார். ஒன்றியக் கழக துணைச் செயலாளர்கள் கவி.கார்த்திகேயன், சுப.சிற்றரசன், சந்திர வடிவம்ராஜா, ஒன்றிய பொருளாளர் கோ. மோகன், மாவட்ட பிரதிநிதிகள் என்.எஸ்.செல்வமணி, க.கழையரசன் கே.எஸ்.கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மயிலாடுதுறை மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் ஞான.இமையநாதன் வரவேற்றார்.

கூட்டத்தில் மயிலாடுதுறை மமாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் கண்ணகிபன்னீர், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என்.இளையபெருமாள், ப.முருகமணி, பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், அ.காந்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் எஸ். சுரோஷ், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் வை.சௌமியன், பெரு.வீரமணி, டி.ராஜ்குமார், ஆர். சாந்தி, தீபா.சத்தியேந்திரன், ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் ஏ.மும்தாஸ், தகவல் தொழில் நுட்ப மணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் டி.புனித செல்வன், ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் சன்.வினோத், மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள்,கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கலைஞர் உருவம் பொறித்த நாணயத்தை வெளியிட வேண்டும் என்று கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களும், தமிழக அரசும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கலைஞர் உருவம் பொறித்த 100 ரூபாய் நாணயம் வெளியிட்ட ஒன்றிய அரசுக்கும், கோரிக்கை வைத்த கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கும் நன்றி தெரிவித்து மயிலாடுதுறை மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் நன்றி தெரிவித்து என்றும்,

தளபதி அவர்களின் தலைமையிலான தி.மு.க. ஆட்சி 2026 சட்ட மன்ற தேர்தலிலும் தொடர்ந்திட தலைவர் தளபதி அவர்களின் இலக்கான 200 இடங்கள் என்ற இலக்கை எட்டிடும் வகையில் மயிலாடுதுறை மத்திய ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும் கழகத்தினர் கழக அரசின் திட்டங்களை பொதுமக்களிடம் எடுத்து கூறும் வகையில் வரும் சட்ட மன்ற தேர்தல் பிரச்சாரத்தை இப்பொழுது இருந்தே தொடங்கிடுவது என்றும் மயிலாடுதுறை மத்திய உள்ள அனைத்து கிளைகளிலும் கிளைக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டத்தை கூட்ட வேண்டும் என்றும், கிளை கழக பொது உறுப்பினர்கள் கூட்ட தீர்மான நோட்டை தலைமைக் கழகத்திற்கு எடுத்து செல்லும் வகையில் ஒன்றியக் கழகம் மூலம் மாவட்டக் கழகத்திடம் ஒப்படைக்க தீர்மான நோட்டை அந்த கிளை செயலாளர்கள், நிர்வாகிகள் ஒன்றிய கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிவைற்றப்பட்டது.



தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நேற்று முன்தினம் (30.08.2024) வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, வி.க.நகர் மண்டலம், வார்டு77க்குட்பட்ட டெமல்லஸ் சாலையில் ரூ.17,57 கோடி மதிப்பில் பக்கிங்ஹாம் கால்வாய்க்கு மழைநீர் வெளியேற்றும் வகையில் கட்டப்பட்டுள்ள நீரேற்று அறை மற்றும் இதர கட்டமைப்புகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன். பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி. மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை மு.மா.சண்முகசுந்தரம்

### செப்டம்பர் 1 (2018)



**திராவிட இயக்கத்தைத் தொடர்ந்து, கழகம் துவங்கியதும் அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**கோவை பகுதியில் கழக முன்னோடிகளின் பெயரில் பல்வேறு மன்றம் – படிப்பகங்களை நிறுவிய இவர், இராமநாதபுரம் பகுதியில் ‘கலைஞர் தமிழ் மன்றம்’ தொடங்கி, அதில் திருக்குறள் வகுப்பும், திருக்குறள் மாநாடும் நடத்தி வந்தவர்.**

**ஒன்றுபட்ட கோவை மாவட்ட அவைத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**